71

விஞ்ஞான விவசாயிகள் சங்கம்
திருப்பாதிரிப்புலியூர் போஸ்ட்
(S. A. Dt.)

# விஞ்ஞான விவசாயம்

## (SCIENTIFIC AGRICULTURE.)



# GROW MORE FOOD

## உணவு உற்பத்தியைப் பெருக்குக.

### CONTENTS.


| | Page. |
|---|---|
| Our Association | 1 |
| Fruit tree Plantation | 3 |
| Ammonium Nitrate } Compost Manure, Potash. } | 6 |
| List of Journals recieved | 7 |
| List of books & reports | 8 |
| Use Your Soil Wisely | 9 |
| Look at the Paddy Yeild in different Countries | 12 |
| List of New members | |


ntific Agriculturiststs' Association,
PUPAPULIYUR P. O.
(S. A. Dt.)

விலை அணா 2.

J (A)
N51
181844

…ருஞா— , வரவு-செலவு பட்டியல் 1949 ஜூலை முதல் 1950 பிப்ரவரி முடி…

| நெ | வரவு. | ரூ. | அ. | பை | நெ | செலவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆரம்ப இருப்பு | 90 | 7 | 9 | 1 | சம்பள வகையரு | 347 | 11 | 8 |
| 2 | சந்தா தொகை | 370 | 0 | 0 | 2 | தபால் செலவு | 92 | 14 | 9 |
| 3 | பிரவேச கட்டணம் | 123 | 0 | 0 | 3 | கூட்டத்திற்கான செலவு | 75 | 8 | 0 |
| 4 | தாவர கன்றுகள் விற்பனை | 724 | 6 | 9 | 4 | ஸ்டேஷனரி சாமான்கள் | 38 | 10 | 6 |
| 5 | நூல் கிலைய டிபாசிட் | 5 | 0 | 0 | 5 | சஞ்சிகைகள், பத்திரிகைகள் | 18 | 6 | 0 |
| 6 | நிதி காரியதரிசியிடமிருந்து சேமிப்பு |  |  |  | 6 | சங்கங்களுக்கு கட்டிய சந்தா | 10 | 2 | 0 |
|  | வரவு | 320 | 12 | 6 | 7 | அச்சுக் கூலி | 160 | 9 | 0 |
| 7 | திருப்பி அனுப்பப்பட்ட சம்பளம் வரவு | 20 | 3 | 0 | 8 | காணுவித செலவு | 1 | 0 | 0 |
| ( | முன்பண வரவு | 374 | 0 | 0 | 9 | தாவர கன்றுகள் வாங்கியது | 638 | 9 | 3 |
| 8 | காணுவித வரவு | 5 | 4 | 0 | 10 | முன் பணம் திருப்பிக் கொடுத்தது | 346 | 2 | 0 |
| 10 | சரிகட்டுதல் | 462 | 9 | 3 | 11 | வெகுமதி சாமான்கள் வாங்கியது | 40 | 12 | 3 |
|  |  |  |  |  | 12 | கணக்கு புஸ்தகங்கள் | 12 | 0 | 0 |
|  | பாங்கிகளில் இருப்பு. |  |  |  | 13 | ஜாடிகள் வாங்கியது | 9 | 9 | 9 |
|  |  |  |  |  | 14 | நிதி காரியதரிசியிடம் சேமிப்பு | 176 | 10 | 6 |
|  | கோ. சென்டிரல் பாங்கு 535—15—7 |  |  |  | 15 | பிரவேச கட்டணம் வாபீஸ் | 5 | 0 | 0 |
|  | (C. N. T.) |  |  |  | 16 | சரிகட்டுதல் | 462 | 9 | 3 |
|  |  |  |  |  |  | செலவு மொத்தம் | 2436 | 2 | 11 |
|  |  |  |  |  |  | கையிருப்பு | 59 | 8 | 4 |
|  | ஆக மொத்தம்... | 2495 | 11 | 3 |  | ஆக மொத்தம் | 2495 | 11 | 3 |

# விஞ்ஞான விவசாயிகள் சங்கம்,

திருப்பாப்புலியூர் P. O.   தென்னாற்காடு ஜில்லா.

## The Scientific Agriculturists' Association,

TIRUPAPULIYUR P. O.   SOUTH ARCOT DISTRICT.

அறிக்கை நெ 10, 11, 12. டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி 1949-50.

## நமது சங்கம்.

மாதா மாதம் நமது சங்கத்தைப்பற்றி எழுத வேண்டியிருக்கிறது. மீட்டிங்குதோறும் நமது சங்கத்தைப்பற்றி பேசவேண்டியிருக்கிறது. இதற்கு ஒய்வு இல்லை. ஏன்? நம் வளர்ச்சி நாம் நினைத்தபடி வேகமாக ஓடவில்லை. நாம் இன்னும் நமது சங்கத்தை ஓர் நிலையான ஸ்தாபிதமாக ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அஸ்திவாரம் பலமாக போட்டுக்கொள்ளவில்லை. அஸ்திவாரத்திற்கு இன்னும் சரியான, ஆழமான பள்ளம் தோண்டவில்லை. இதற்கான யாவும் இந்த 20-வது நூற்றாண்டு பின் பாதி நூற்றாண்டிலும், இந்த இரண்டாவது யுத்தத்திற்கு பின்னும், நமது காங்கிரஸ் கவர்ன்மெண்டார் உணவு நிலை நெருக்கடி தீர்க்க பிரயாசைப்படும் காலத்திலும், ஒவ்வொரு நாளும் சர்க்கார் அதிகாரிகள் மந்திரிகள் பேசும் உணவுப் பிரச்னை காலத்திலும், விவசாயிகளாகிய நாம் பிரதி பலனாக என்ன செய்தோம், என்ன பலன் அடைந்தோம், என்ன பலன் கஷ்டப்படும் பிரதேசங்களுக்கு சேர்த்து உற்பத்தி செய்து கொடுத்தோம், சர்க்கார் பிரசினைக்கு, உணவு உற்பத்தி உதவிகளுக்கு என்ன பிரதி உபகாரம் செய்தோம் என்று நாம் சொல்ல முடியவில்லை. செய்ததை எடுத்துக்காட்டமுடியவில்லை. பிறருக்கு தெரியும்படி சொல்லவில்லை. இது நியாயமா? உத்தியோகஸ்தர்களே- செய்த வேலைக்கு பிரதி பலன் என்ன என்று புள்ளி போட்டுக்கொடுக்கிறார்கள். அனுபவித்ததற்கும், ருசிப்பிற்கும் ருசியில்லை உண்டு என்று சொல்லாமலிருப்பது நியாயமாகுமா? நாம் மாத்திரம் பலரிடமிருந்து, சர்க்காரிடமிருந்து, விவசாயிகளாகிய நமக்கு, விவசாயங்களுக்கு விவசாய சாதனங்கள், தண்ணீர் வசதி எல்லாம் வேண்டும் என்று

வற்புறுத்துகிறோம், முறையிடுகிறோம், கேட்கிறோம். திட்டுகிறோம். நஷ்டத்தை நிரூபிக்கிறோம். பயிர் சாவியை பாருங்கள் என்கிறோம். ஆனால் சர்க்கார், பெரியோர் முதலியவர்கள் பேச்சில் சொன்ன அம்சங்கள், நடத்தியபின் காட்டிய அம்சங்கள், செய்த அம்சங்கள் இவைகளுக்கு என்ன பலன் நாம் காட்டுகிறோம் என்று எடுத்துக்காட்டவில்லை. பயனடையவில்லை என்று எந்த விவசாயியும் சொல்ல முடியாது. பயனடைந்த நாம் சொல்லி, கொடுத்தவர்கட்கு ஊக்கம் காட்டி அதிகமாக நமக்கு அவர்கள் கொடுத்து உற்சாகம் உண்டாக்க செய்ய வேண்டும். அந்த மாதிரி முறையில் பாடுபடவே நமது சங்கம் முன்னணியில் வேலை செய்ய வந்திருக்கிறது.

இப்படி வேலை செய்ய, ஒவ்வொரு அங்கத்தினர்கள் பயனடைய, கற்பிக்க, சங்கத்திற்கு ஏற்ற சாதனம் வேண்டும், ஒற்றுமை வேண்டும், பலர் உதவி வேண்டும், அங்கத்தினர்கள் சேர்த்தாக வேண்டும், ஆகையினால அங்கத்தினர்களாய் சேர்ந்த அங்கத்தினர்கள், கூட்டத்திற்கு தவறாமல் வரவேண்டும். செய்த வேலையை சர்ச்சை செய்ய வேண்டும். பேச வேண்டும். மற்ற சர்ச்சை, பிரயோஜனமுள்ள வேறு சர்ச்சை செய்து, பேசி, தெரிந்து பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அங்கத்தினர்கள் ஒவ்வொரு கிராமத்துக்கு குறைந்தது 12 பேர் சேர்க்கவேண்டும். ஒவ்வொரு அங்கத்தினர்களும் தங்கள் சுற்றத்தார், சினேகிதர் ஆக 12 பேர்கள் வருட முடிவுக்குள் சேர்த்துக் கொடுக்க வேண்டும். இந்த உதவி சரியாக, சரியான அஸ்திவாரத்துக்கு, சரியான பள்ளம் தோண்ட, அஸ்திவாரம்போட உதவியாகும். வருட கான்பரன்ஸ் நடத்த வெகுமதிகள் தேவை. இதற்கு வேண்டிய ஊக்கம் அங்கத்தினர்களும், விவசாயிகளும் செய்ய வேண்டும்.

இந்த சஞ்சிகை கண்ணுறும் உத்தியோகஸ்தர்கள் விவசாயிகள் ஊக்கம் காட்டவேண்டும். நடத்தையில் காட்டவேண்டும் என்று விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

G. சௌந்தரராஜன்.

OFFICE OF
10 JAN

# பழமர உற்பத்தி

## பழவர்க்க மண்

பழவர்க்க மண்கள் அடியிற்கண்ட அம்சங்கள் உடைத்தனவாய் இருக்கவேண்டும். இப்படி இருப்பது பழ வகை மரங்கள் பயிரிடுவதில் அதிக லாபம் கொடுக்க ஏதுவுள்ள மண்ணாகும்.

1. மண்கண்டம் அதிக ஆழமுள்ளதாயும் மண் வயணம் பொருத்தமுள்ளதாயும்-வேர்கள் நாற்புறமும் கீழேயும் பரவ, ஊன்றத்தக்கதாக இருக்க வேண்டும்.

2. எக்காலத்திலும் மண்ணில் வேண்டும் ஈரம் இருக்கத்தக்க மண் கண்டம் வேண்டும்.

3. கடின தரை இருக்கலாகாது. தண்ணீர் தேங்கி வடிய வழியில்லாத மண்களின் கண்டங்கள் பூமியில் இருக்கலாகாது

4. காற்றோட்டமும், வடிகால் வசதியுமுள்ள மண் கண்டம் இருக்கவேண்டும்,

5. மண் கண்டத்தில் மண் உப்புகள், கார உப்புகள் முதலியன கூடாது (Soil Alkali and Salts).

## மண் வயணம் (Soil-Texture.)

மண் வயணத்தைக்கொண்டே வடிகால் வசதி குறிப்பிடவேண்டியிருக்கிறது. பழ சாகுபடிக்கு மண் வயணம் பார்ப்பது முக்கியமாகும். அதைப் பொருத்தே வடிகால் வசதி குறிக்கப்படும். மண் தனக்குள் தண்ணீர் வசதி நிறுத்தும் சக்தி கொண்டதாய் இருக்க வேண்டும். கூடவே அதிக தண்ணீர் வடியச் செய்து கொள்ளக்கூடிய சக்தி வாய்ந்ததாய் இருக்கவேண்டும். மணல் மண்கண்டம் சீக்கிரம் காய்ந்துவிடும்-வேண்டிய எருச் சத்து இல்லாமலிருக்கும். களி மண் கண்டம் பலனில்லை. பழ மண் சாதாரண இருமண் கட்டுப் பாடுள்ள நிலமாய் இருப்பது நல்லது. அதிக ஆழ முள்ளதாய் இருக்கவேண்டும். 4 அடிக்குள் சிறிதளவு மாறுதல்களுடன் இருக்கலாம் - வடிகால் வசதி வேண்டும்.

மண் வயணம் முக்கியமாக கருதப்பட வேண்டியிருந்தாலும், பழ வகைகளுக்கு ஏற்ற மண்தான்

தேவை என்று பார்ப்பதனல் சொல்ல முடியாது. அனுபவத்தில் பழ வகை மரங்களுக்கு தனித்த ஓர் மண் தேவையென்று தெரியவில்லை. எல்லா மண்களிலும் வளர்கிறது. மணலிலிருந்து திறமையான பசளை மண் வரைக்கும் உள்ள மண் கண்டங்களில் சாதாரணமாக வளரப்பெற்று வருகிறது. புளோரிடா கடற்கரையோரங்களில் 100-க்கு 98 பங்கு மணலுள்ள மண்ணில் அன்னசி பயிரிடப்பட்டு வருகிறது. பழவகைகளுக்கேற்றது பசளை மண்ணுக இருந்தாலும் (Loam) மணல் கலந்த பசளை மண்ணிலிருந்து, களி மண்வரைக்கும் பழவகைகளுக்கு ஏற்றதாகும். ஆனல் வேண்டிய ஈரம் இருக்கக்கூடிய மண்ணுக இருக்கவேண்டும். வடிகால் வசதியிருக்க வேண்டும்.

### தேவையான மண் ஆழம்

மரங்கள் சாதாரணமாக அதிகமான வேர்நிலைமை போகக்கூடிய மரங்களாக இருக்கிறது. ஆழமாகவும், அகலமாகவும் செல்லக்கூடிய வேர் மரங்கள் அதனுடைய பழஉற்பத்தி, சக்தி, வயதை அதிகமாகப் பொருத்திருக்கிறது. மண்கண்டம் அதிகமாக உள்ள இடத்திலும்,மண்வயணம் பொருத்தமாக உள்ள இடத்திலும் வேர் பாகங்கள் அதிக உற்பத்திக்கு இடம் தருகிறது. பழமரங்களுக்கு ஏறக்குறைய 5-அடி ஆழம மண்கண்டம் இருப்பது அவசியமாகத் தெரிகிறது. சில இடங்களில் மண்கண்டம் இருப்பதே மேலாகத் தெரிகிறது மண்சத்து-தண்ணீர் உட்கொள்ளும், தங்கும் சக்திகுறைவாய் இருந்தாலும் பரவாயில்லை என்று தெரிகிறது.

### வடிகால் வசதி

வடிகால் வசதி இல்லாத நிலங்களில் பழ மரங்கள் வளர்ச்சி கொண்டு சரியாக நிலைப்பதில்லை. தண்ணீர் தேக்கம் பழ மரங்களுக்கு பொருத்தமல்ல. ஆகையினல் நல்ல காற்ளேட்டமும், வடிகால் வசதியும் பழ மரங்களுக்கு அதிக அவசியம். நான்கு அடிக்குள் கெட்டித் தரையோ, தண்ணீர் ஊடுருவிச் செல்லமுடியாத கெட்டித்த பாகமோ இருக்கலாகாது. மழை பெய்தவுடன் தண்ணீர் 4-அடிக்குள் இருக்கலாமே தவிர மற்ற நேரங்களில் இருக்கலாகாது. அமெரிக்க நாட்டின் ஆஸ்கேம்ப் (Oscamp) துரையவர்கள். பழ

விருத்தி விஸ்தீரணம் அதிகமாகாமல் இருப்பதற்கு காரணம் வடிகால் வசதியுள்ள அதிக நிலங்கள் இல்லாதது காரணம் என்று சொல்லியிருக்கின்றூர். மண்ணின் நிறம் பழ மரங்கள் பயிரிடுவதற்கு உகந்த நிலைமை உண்டா இல்லையா என்று சொல்லக்கூடிய நிலைமையில் இருக்கிறது. வடிகால் வசதியுள்ள காற்ளேட்டமுள்ள நிலங்களில் சாதாரணமாக நிறம் ஒரே மாதிரியாக இருக்கும். வடிகால் வசதிகள் கம்மியாக இருந்தால் அடிமண் கண்டத்தில் அடையாளமாகத் தெரியக்கூடிய மண் வேறுபாடு நிறத்தில் தெரியும்.

**மண் கண்டத்தில் ஈரம் இருத்தல்.**

பழ மரங்கள் தங்கள் வளர்ச்சி காலங்கள் பூராவும் மண் கண்டத்தில் ஈரம் தங்கள் வளர்ச்சிக்கு வேண்டுகிறது மண்ணில் இருக்கும் ஈரம், அவைகள் அளவு, வேண்டும் போது கிடைப்பது—காலாகாலத்தில், வளர்ச்சிக்குரிய காலத்தில் கிடைப்பது மற்ற எல்லா அம்சங்களையும்விட முக்கிய அம்சமாக எடுத்துக் கொள்ளவேண்டி யிருக்கிறது.

**மண்ணின் இயல்பு தன்மை.**

பழவர்க்க விருத்திக்கு மண்ணில் இருக்கும் உணவுப் பொருள் தன்மையைவிட, இயலபுத் தன்மை முக்கியமானது. நல்ல மண் எப்பொழுதும் அதிக உயர்வுப் பொருள் உடைத்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. மற்ற பயிர்களுக்கு நன்ருக ஏற்ற மண் பழ வர்க்கத்துக்கு, பலனில்லாமல் போகலாம் அதேமாதிரி பயிர்களுக்கு,பலனில்லாத பழவகைகளுக்கு ஏற்ற இயல்புத்தன்மை யுள்ளதாக ஆகலாம். இது எருவினுலும், பார்வையினுலும் ஆகலாம். இயல்புத்தன்மை சரியாக இருந்தால் பழுவகையில் மற்ற பயிர்களை விட அதிக லாபம் எடுக்கச் செய்யலாமா என்பது கேள்வியாகும். தோப்பில் தனி மர விருத்தி, அதிக விளைவு பார்ப்பது சமயங்களில் மண்ணின் தன்மை, வடிகால் வசதி சில விடங்களில் தோட்டத்தில் காணப்படுவதை பொருத்திருக்கும். இது மண்ணின் எருச்சக்தியைப் பொருத்தில்லாமலே இந்த விளைவு கொடுக்கலாம்.

(தொடரும்)
(G. S.)

## ஆமோனியம் நைட்ரேட்.

பாட்னாவில் சர்க்கார் விவசாய பண்ணையில் ஸ்டாக் செய்திருந்த 2000 அமோனியம் நைட்டிரேட் மூட்டைகள் திடீரென்று நெருப்பு பிடித்து பலத்த சேதமுண்டாக்கிவிட்டது.

(பத்திரிகை செய்தி.)

நெருப்பு பிடித்துக்கொள்ளும் வஸ்துவாதலால் அமோனியம் நைட்டிரேட்டை விவசாயிகள் வெகு ஜாக்ரதையாக கையாள வேண்டும்.

---

## கம்போஸ்ட் எருகொண்டு சேர்க்கும் இயந்திரம்.

ஒரு மணி நேரத்தில் சுமார் 10 டன் கம்போஸ்ட் எருவை குழியிலிருந்து எடுத்து, கல், பீங்கான் துண்டு, கண்ணாடி ஒடுகள் முதலியன இல்லாமல் சலித்து சுத்த மாக்க ஒரு இயந்தர சாதனத்தை புது டில்லி, இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்தார் இயற்றி இருக்கி றார்கள். இப்படி சலித்து சுத்தமாக்கப்பட்ட எருவை, இயந்திர மூலமாக தூக்கி பக்கத்திலிருக்கும் டிரக்கு களிலோ அல்லது லாரிகளிலோ ஏற்றப்படுகிறது. கம் போஸ்ட் எருவை குழியிலிருந்து எடுத்து, சலித்து, சுத்தமாக்கி வண்டிகளில் ஏற்றப்படும் வரையில் எல்லா வேலைகளையும் இயந்திரமே செய்கிறது. வேலை ஆட்கள் தேவை இல்லை. மேற்படி யந்திரம் டிராக்ட ரின் உதவியைக் கொண்டு இயக்கப்படுகிறது. ஒரு டன் எருவை எடுத்து, சுத்தமாக்கி, வண்டியில் ஏற்றித் தர ரூ. 1—7—0 தான் செலவாகிறது.

---

## பொட்டாஷ்.

பொட்டாஷ் உரங்களை ஈரமில்லா காய்ந்த இடத்தில் சேமித்து வைக்க வேண்டும். அதிகமாக மூட்டைமேல் மூட்டை அடுக்கி வைக்கலாகாது. அடி மூட்டைகள் கட்டி கட்டி கெட்டு விடும். பொட்டாஷ் உரங்களை மற்ற உரங்களுடன் சேர்த்து வைக்கக்கூடாது. சல்பேட் ஆப் ஆமோனியா மூட்டைகளின் மேல் பொட்டாஷ் உரத்தை வைக்கவும்.

---

# சங்கத்திற்கு வரும் சஞ்சிகைகளின் பெயர்.

இந்த சஞ்சிகைகள் பழைய மாதத்தியது, அங்கத்தினர்கள் வேண்டுபவர்கட்கு கொடுக்கப்படும். 10 தினத்திற்குள் அங்கத்தினர்கள், அங்கத்தினர்கள் செலவில் திருப்பியனுப்ப வேண்டும். சஞ்சிகைகள் கிழியாமலும், ஜாக்கிரதையாகவும் திருப்பியனுப்ப வேண்டும். சஞ்சிகைகள் தொலைந்து போய்விட்டால் கிரயம் செலுத்த வேண்டும், அல்லது வேறு சஞ்சிகை திருப்பியனுப்ப வேண்டும். டிபாசிட் தொகை ரூ. 5/- இந்த சலுகை வேண்டுபவர்கள் கட்ட வேண்டும்.

| வரிசை எண். | சஞ்சிகை பெயர். | யார் பிரசுரிப்பவர். | எவ்விடமிருந்து பிரசுரிக்கப்படுகிறது. |
|---|---|---|---|
| 1 | Madras information | The director of information and Publicity | Madras |
| 2 | The Indian cocanut journal. | The Indian Central Cocanut committee. | Ernakulam. |
| 3 | The Indian journal of Horticulture | The Horticultural Society of India. | New Delhi. |
| 4 | Indian farming. | Indian Council of Agricultural Research. | Delhi. |
| 5 | The Indian journal of Agricultural economics | The society of Agricultural economics | Bombay |
| 6 | The Indian Bee-Journal. | The All India Bee-Keepers' Association. | Nainital. |
| 7 | Fact. | Fertilisers and Chemicals Travancore Ltd. | (Travancore.) Alwaye. |
| 8 | Cocanut Bulletin. | The Indian central Cocanut Committee. | Ernakulam. |

# சங்கத்தில் தற்சமயம் கைவசம் இருக்கும் புஸ்தகங்கள் - ரிப்போர்ட்டகள்.

அங்கத்தினர்கள் இந்த புஸ்தகங்கள், ரிப்போர்ட்டுகள், காரியதரிசியிடமிருந்து பெற்று போகலாம். 15 தினத்திற்குள் அங்கத்தினர்கள் செலவில் திருப்பியனுப்பவேண்டும். புஸ்தகங்கள் தொலைந்துபோனால் கிரயம் செலுத்த வேண்டும். டிபாசிட் தொகை ரூ. 5/- (இந்த சலுகை வேண்டுபவர்கள்) கட்ட வேண்டும்.

| வரிசை எண். | புஸ்தகம்- ரிப்போர்ட் பெயர். | ஆசிரியர். | போடப்பட்ட இடம். |
|---|---|---|---|
| | | **BOOKS.** | |
| 1 | Bhuvel-Socio Economic survey of a village | Vimal shah and sarla shah | Bombay |
| 3 | Sugar Cane research and development in India and resume of work caried out during recent times | Indian Central Sugar cane Committee | Delhi |
| 3 | Rural Raroda | The Indian Society of Agricultural Economics. | Bombay |
| 4 | The Indian Bee Journal Volume XI 1949. | R N Mutoo B. Sc. LL B. Organ of All India Bee - Keeper's Association Nainital U P. India | Naintal (U P. |
| 5 | Fact Volume for 1947-48 Volume II 1946-47 | Fertilisers and Chemicals Travancore Ltd | Alwaye (Travancore) |
| 6 | The Indian farming Volume XI 1948. | Indian Council of Agricultural research | Delhi |
| | | **REPORTS.** | |
| 1 | Resume of work of the Indian Central Tobacco committee | | 1948 Edition Madras |
| 2 | Bio Chemical and allied research in India | Society of bio logical chemists | Bangalore |
| 3 | Scheme of research on pests and diseases of Governmtnt. Madras Province | Indian oil seeds Committee. | Madras |
| 4 | Annual report of the Indian central Sugar cane committee for the year 1944-45 | Indian Central Sugar cane Committee | New Delhi |

# USE YOUR SOIL WISELY.
# நிலத்தை சரிவர உபயோகியுங்கள்.

### நில உரிமை

நாம் சாதாரணமாக ஜனத்தொகை பெருக்கம் பூமி தாங்கமுடியாது, அல்லது நிலத்திலிருந்து வரும் வருமானம் ஜனத்தொகை பெருக்கத்திற்கு போதாது என்று சொல்லுகிறோம். இதற்கு ஆங்கிலத்தில் "The pressure of the population on theland" என்று சொல்வது ஜீவனற்ற பயனற்ற பேச்சாகும். இது உருவகமான பேச்சாகும்.(Figurative) மனிதனும், மிருகங்களும், வாழ்வதற்கு பூமியிலிருந்து எவ்வளவு உணவு வேண்டுமென்று நிர்ணயிக்கிறோமோ, அது தான் நிலத்தின்மேல் வேண்டுமென்று உரிமை கொண்டாடி கேட்பதாகும் இதுதான் Pressure ஆகும்.

### ஈரம் கொடுத்தல்

மனிதனும், மிருகங்களும், சுகமாக வாழவேண்டுமானல் நில வளமை சரியாக இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய கண் காணிப்பு வேண்டும். இது முக்கியமான விஷயமானதினுல் யாவரும் கவனிக்க வேண்டிய விஷயமாகும். நிலத்திலிருந்து நிலத்தில் இல்லாததை எடுக்க முடியாது. நிலத்திற்கு கால வேறுபாட்டு காலத்தில் ஈரம் இருக்க முயற்சிகக வேண்டும். மழையில்லா காலத்தில், மழை கொஞ்சம் பெய்யும் காலத்தில் ஈரம் இருக்க கவனிக்க வேண்டும். இதனுல் தான் சர்க்கார் அதிக விஸ்தீரணத்தில் நீர்வளம் உண்டாக்க அரும்பாடுபடுகிறுர்கள். நிலபரப்பு, மற்ற தேசங்களைவிட அதிகமாக இருந்து பிரயோஜனமில்லை. அதிக நிலங்களுக்கு நீர்வளமை கொடுக்க வேண்டுவது அவசியம்.

### ஈரம் அல்லாதவை வேண்டுபவை.

ஈரம் கிடைத்தால் மாத்திரம் போதாது இதர கஷ்டங்கள் அல்லது மற்ற வேண்டுபவைகள் உண்டாகிறது. அதாவது நல்ல வடிகால் வசதி, அளர் சம்பங்

தப்பட்ட உப்புக்கள் குறைத்தல்; நிலத்திற்கு ஓய்வு கொடுத்தல்-அதாவது அதிகமாக எக்காலமும் நிலங்களைப் பயிரிடாமல் சில காலம் பயிரிடாமல் இருப்பது. மற்றொரு விதமாக பார்த்தால் ஈரம் மாத்திரம் நில வளமையை பெருக்கிவிடாது. அதிக ஜனத்தொகைக்கு வேண்டிய பலனை பெறவேண்டும்

**இந்திரிய உரத்தின் மகிமை.**

அதேபோல் பயிர் செய்வதற்கு ஈரம் வேண்டும். நமக்கு இந்திரிய உரம் அவசியம் தேவை. அதாவது மக்கினதொழு எரு, கம்போஸ்ட் எரு, இந்திரிய சத்து உரம், மக்கின தழை உரம், முதலியன வாகும். பயிர் செய்பவர்கள் தங்களுடைய நிலங்களுக்கு அதிக பயிர் உற்பத்தி செய்ய மக்கின சத்து. தழைச் சத்து உரம் அவசியம் தேவை என்று தெரிந்துகொள்ள வேண்டும். அதை அநேகர் தெரிந்து கொண்டதாக தெரியவில்லை. இது நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிமிடமும் சிந்தித்து பயன் படுத்திக் கொள்ளவேண்டும். இந்த உரமானது ஈரம் தாங்குவதற்கு ஏற்ற உரமாகும் வேர்கட்கு வேண்டும் போது நாம் கொடுக்கக்கூடிய சத்து ஆகும். பயிர் செழுமையாய் வளருதற்கு வேண்டிய முழு ஆகாரமும் கொடுக்கிறது. பயிருக்கு வேண்டிய எல்லா தாதுப் பொருள்களும் கொடுக்கிறது மனிதனுக்கு, மிருகங்கட்கு வேண்டிய முக்கிய உணவு புஷ்டிச் சத்துக்கள், வைடமின் சத்துக்கள் பயிர் தாவரம் மூலியம் இந்த உரச்சத்து கொடுக்கிறது

**விறகு மரம் வளர்த்தல்.**

இது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஈரம் கிடைக்கும் எந்த வித சத்துவையும் வளப்படுத்தி நிலத்திற்கு இந்தக் காலத்தில் உபயோகப்படுத்துவது அவசியம். இந்தப் போர் மண் வளத்தை விருத்தி செய்ய அவசியம். இது உணவு உற்பத்தி பெருக்கத்துக்கு முக்கிய சாதனத்தில் ஒன்றாகும். நாம் சாணத்தை விராட்டி தட்டி எரிக்காமல் விறகு கொடுக்கும், சீக்கிரம் வளரக்கூடிய மரங்கள் வளர்த்து விராட்டி உபயோகத்தை குறைக்க வழிதேட வேண்டும். மெதுவாக வளரும்,

விறகு மரங்களும் பயிரிட வேண்டும். இதற்கான முயற்சி, மழை காலத்தில் மரம் நடுதல் விழா நடத்தி எல்லா கிராமங்களிலும் நட ஏற்பாடு செய்ய வேண்டும். யாவரும் இதில் முயற்சி செய்ய வேண்டும். இது நமது தேசங்களில் உற்சவம் நடத்துவதுபோல் நடத்த வேண்டும். விழா காலங்களில் இதையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

கழிவுப் பொருள்களை சேர்த்தல்.

இதே காலத்தில் நாம் கிடைக்கும் கழிவுப்பொருள்களை, மாட்டுச்சாணம் முதலியவைகளை நன்ருன வழிகளில் சேகரிக்க முற்படவேண்டும். இதை பக்குவமாக நிலத்துக்கு போடவேண்டும். நிலம் நிச்சயமாக போட்ட அளவுக்கு பிரதிபலன் கொடுக்கும்.

முடிவு

நமது இந்தியாவுக்கு நிலம் ஓர் பொக்கிஷம் ஆகும். நிலம் உடைத்தானவர்களுக்கு இது ஓர் பொக்கிஷம். நிலத்தை காப்பாற்றவேண்டும். பூமி ஆகாரம் குறையாமல் காப்பாற்றவேண்டும். பூமியில் அதிகமாக ஆகாரம் சேர்க்க பார்க்கவேண்டும். அதிக ஊதியம் நிலத்தில் எடுக்க பாடுபடவேண்டும். நல்ல புத்தி வழியில் நிலத்தை உபயோகப்படுத்த வேண்டும் நில வளமையை அநியாயமாக சத்தை திருடுதல்போல் செய்யலாகாது. சத்தைக் குறைத்து விடுதலாகாது. அதற்கு வேண்டிய எருவும் கொடுக்கவேண்டும். களைகள் பூமியில் மற்றகெடுதல் செய்ய விடுதலாகாது. ஒவ்வொரு அங்குலநிலத்தையும் நல்ல வழியில் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். நிலத்திற்கு மனிதன் தன்னுடைய கடமை என்ன என்று தெரிந்து செய்யவேண்டும். நாம் மற்ற உபயோகம் தெரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய புத்தி கூர்மையினுல், தெரிந்த விஞ்ஞான முறைகளை உபயோகிக்கவேண்டும். வளத்தை சேர்ப்பிக்கவேண்டும். உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டும்.

G. S.

# நம் இந்திய தாய்நாடு நெல் சாகுபடியில் வகிக்கும் ஸ்தானத்தைப் பார்!

| | ஏக்கர் ஒன்றுக்கு சராசரி நெல் விளைவு பவுண்டு. |
|---|---|
| இதாலி | 3120 |
| ஜப்பான் | 2280 |
| ஈஜிப்ட் | 2160 |
| சைனு | 1560 |
| அமெரிக்கா | 1500 |
| சையாம் | 900 |
| பர்மா | 825 |
| இந்தியா | **780** |

## இந்தியாவில் விளைவு குறைந்திருக்கக் காரணங்கள் என்ன?

1. பருவக்காற்றின் நிலை இல்லாத மோசம்.

2. நெல் விளையும் பிராந்தியங்களில் சரியான நீர்பாசன வசதிகள் இல்லாமை. (நெல் விளையும் நிலத்தில் சுமார் 48 சதம் நிலத்திற்குதான் பாசன வசதி இருக்கிறது)

3 போதுமான பொறுக்கு வித்துக்கள் உபயோகிக்காமல் இருத்தல்,

4. வருஷக் கணக்கில் விடாமல் பயிரிட்டதால் குன்றிய நிலவளத்திக்கு போதுமான உரமிடாதிருத்த முதலிய காரணங்கள்தான்.

காலா காலத்திலே, போதிய நீர்பாய்ச்சி, தேவையான உரமிட்டு நிலவளம் குன்ருமல் பாதுகாத்து சிரத்தையோடு பருவத்திற்கு தகுந்த பொறுக்கு நெல்லை நட்டு பயிர் செய்தால் விளைவு பெருகாதா? உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு அவரவர்கள் தங்கள் தங்கள் நிலத்தை சரிவர உழுது பயிர் செய்தால் போதும். விளைவுப் பெருக்கத்தால் விவசாயப் பொருளாதர சீர்திருத்தம் வரும்-நாமும் முன்னேறுவோம்-நாடும் செழிக்கும்.

(Dr. D. V. Bal, Msc. Ph. D.
Madras Agricultural journal. Feb. 1950)

**நெல் பயிர் செய்.**

# டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சேர்ந்த புதிய அங்கத்தினர்கள் ஜாபிதா.

| பிரவேச நெ. | பெயர். | ஊர். | கிராம நெ. | பிரவேச கட்டணம் | சந்தா தொகை. | வகுப்பு. |
|---|---|---|---|---|---|---|
| 57 | ஸ்ரீ அ. கேசவ படையாக்ஷி | திருவஹீந்திரபுரம் | 160 | 2 | 3 | 3வது |
| 58 | ஸ்ரீ க. ராஜா நாயுடு | தீர்த்தனகிரி | 66 | 2 | 3 | 3வது |
| 59 | ஸ்ரீ ம. தாண்டவராய படையாக்ஷி | திருமாணிக்குழி | 160 | 2 | 3 | 3வது |
| 60 | ஸ்ரீ T. S. கோவிந்தாச்சாரி | புதுப்பாளையம் | 139 | 2 | 2 | 3வது |
| 61 | ஸ்ரீ K. S. ராதாகிருஷ்ணன் | கீழ்இழிஞ்சிபட்டு | 130 | 5 | 10 | 1வது |
| 62 | ஸ்ரீ V. துரைசாமி நாயுடு | பிருந்தாவனம் C. N. T. | 139 | 2 | 3 | 3வது |
| 63 | ஸ்ரீ D. முத்துகிருஷ்ண படையாக்ஷி | பாலூர் | 10 | 5 | 10 | 1வது |
| 64 | ஸ்ரீ வெங்கடசுப்பா ரெட்டியார் | மேல்பட்டாம்பாக்கம். | 12 | 5 | 10 | 1வது |
| 65 | ஸ்ரீ M. V. ராமச்சந்திரன் | மருதாடு | 157 | 3 | 7 | 2வது |
| 66 | ஸ்ரீ R. சாம்பசிவம் | குறிஞ்சிப்பாடி | 83 | 3 | 7 | 2வது |
| 67 | ஸ்ரீ V. M. சுந்தரராமானுஜ ரெட்டியார் | வெள்ளப்பாக்கம் | | 5 | 10 | 1வது |
| 68 | ஸ்ரீ P. குப்புசாமி முதலியார் | கொங்கராயனூர் | 6 | 3 | 7 | 2வது |

# The Scientific Agriculturists' Association,

## CUDDALORE N. T. S. A. DT.

**Object:** a) To spread the knowledge of Scientific Agriculture among its members and public and see for the adoption of the same by them.

b) To systematise agricultural accounting.

c) form an Esprit-de-corps among its members.

**Means:** By Conducting meetings—arranging excursions-reading agricultural journals & Books-running library—Cooperating with Government—organising Competitions—debating on the latest scientific methods—holding Conferences—publising periodicals and pamphlets—promoting Beekeeping, fish rearing, poultry farming & other allied cottage industries etc.

**Activities:** The activities of the Association shall be entirely non-political, non-communal and non-controversial.

**Ideal:** The fundamental ideal of the Association shall be the material and educational advancement of its members in the Agricultural Field.

**Membership:** Open only to Agriculturists of this district who are above 18 years of age and in addition to this they should have faith in Scientific Agriculture and should be adopting one or more improvements advocated by the Govt. Agricultural department.

**Subscription:**

| Class | | Annual Subscription. | Entrance Fees. |
|---|---|---|---|
| First | Rs. | 10 0 0 | 5 0 0 |
| Second | | 7 0 0 | 3 0 0 |
| Third | | 3 0 0 | 2 0 0 |

Please strengthen our Association by enrolling more and more members. This in turn will be definitely fruitful in increasing Production.

Sri Vani Vilasam Press, Tirupapuliyur